தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 310

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையத்

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பத்தாம் தொகுப்பு

(இலக்கியம்)

*

பதிப்பாசிரியர் :

புலவர் ச. திலகம், பி. லிட்.,

தமிழ்ப்புலவர்,

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்,

வெளியிடுபவர் :

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

*

கி. பி. 1990] [விலை ரூ. 16—00

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | ... | Tamil Catalogue Vol. X |
| Editor | ... | S. Thilagam, B. Litt., |
| Publisher | ... | M. Sadasivam, Director, Sarasvati Mahal Library |
| Publication No. | ... | 310 |
| Language | ... | Tamil |
| Edition | ... | I Edition |
| Date of Publication | ... | Dec. 1990 |
| Paper used | ... | 14·2 Kg. Seshasayee |
| Size of the Book | ... | 21 × 14 cm. |
| Printing Type used | ... | 12 pt. |
| Number of pages | ... | 128 |
| No. of copies | ... | 500 |
| Price | ... | Rs. 16/- (Rupees Sixteen only) |
| Printer | ... | Sarasvati Mahal Library Press |
| Binding | ... | Card Board |
| Subject | ... | Catalogue |

# பதிப்பாசிரியர் முகவுரை

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தின் தமிழ்ப் பகுதியில் உள்ள இலக்கிய, மருத்துவச் சுவடிகளின் கேட்லாக் 13 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இதில் 1, 2, 6, 7, 10 ஆகிய தொகுதிகள் இலக்கியச் சுவடிகள் பற்றியும், 3, 4, 5, 8, 9. 11, 12, 13, ஆகிய தொகுதிகள் மருத்துவச் சுவடிகள் பற்றியும் வெளிவந்துள்ளன.

இந்தப் பத்தாவது தொகுதியின் சுவடி விளக்கம் பட்டியலில் 17 சுவடிகளின் விளக்கங்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. இவை இந்நூலகத்தில் 83, 84 ஆம் ஆண்டுகளில் ஆக்கம் பெற்றவைகளாகும். மேலும் இத்தொகுதியில் நூல்களைப் பொருள் வரிசையில் பிரிக்கப் பெற்று விளக்கமளிக்கப் பெற்றுள்ளன. இவை முறையே கணிதம் முதல் சோதிடம் ஈறாக இத்தொகுதியிலிடம் பெற்றுள்ளன.

இந்நூல் வெளிவர அனுமதிதந்த நூல் நிலைய இயக்குநர் திரு. மு. சதாசிவம் அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டு உதவிய நூல் நிலைய அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர்.
*27—11—90*

புலவர் **ச. திலகம்,** பி. லிட்.,
தமிழ்ப்புலவர்,
சரசுவதி மகால் நூலகம்.

# வெளியிடுவோர் உரை

தஞ்சை சரசுவதி மகாலிலுள்ள தமிழ்ச்சுவடிகளின் கேட்லாக் பத்தாவது தொகுப்பாகிய இந்நூலைத் தற்பொழுது வெளியிட்டுள்ளோம். இதன்கண் 117 சுவடிகள் வரிசைப் படுத்தி விவர அட்டவணையாகத் தரப்பட்டுள்ளன. இத் தொகுப்பில் இலக்கியச் சுவடிகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. மேலும் 300 சுவடிகளுக்கு விவரப்பட்டியல் தயாரித்து வெளியிடவேண்டும். தொண்டுள்ளம் கொண்ட பெருமக்கள் பலரும் இன்றும் நூலகத்திற்குச் சுவடிகளை அன்பளிப்பாகக் கொடுத்து வருகின்றனர். அவற்றையும் தொடர்ந்து வரும் தொகுப்புகளில் வரிசைப்படுத்தி வெளியிட உள்ளோம்.

இத்தொகுப்பு நூலை வெளியிடப் பெரிதும் உதவிவரும் நடுவண் அரசினருக்கு நூல் நிலைய ஆட்சிக் குழுவின் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

தஞ்சாவூர்.
27—11—90

**மு. சதாசிவம்,**
இயக்குநர்.

## இத்தொகுதியில் உள்ள சுவடிகளை இந்நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்தவர்களின் பட்டியல்

1. திரு ச. வெங்கட்ராமன், கோமல் (மயிலாடுதுறை).
2. ,, வி. கோபால்ரெட்டி, செங்காட்டுப்பட்டி. தஞ்சாவூர்.
3. ,, கோ. இராமசாமிப்பிள்ளை, மத்தகிரி திருச்சி.
4. ,, ஜே. கணேசன், புவனகிரி.
5. ,, து. முத்துச்செட்டியார், ஆலங்குழி. புதுக்கோட்டை.
6. ,, ச. ம. சங்கப்பிள்ளை, திருச்சி.
7. திரு சுந்தராமன், தஞ்சாவூர்.
8. ,, R. M. K. வேலுச்சாமி, பழனி.
9. திரு D. நல்லுசாமி, திருச்சி.
10. திரு டி. துரைராஜ், (E. N. T) தஞ்சாவூர்.
11. திரு பி. சின்னச்சாமி, புதுக்கோட்டை.

12. திரு கவிஞர் பருத்தியூர் பாலு, பருத்தியூர்.

13. திரு மு. பாலசுப்ரமணியம், தஞ்சாவூர்.

14. திரு மு, இராமச்சந்திரநாயுடு, சீர்காழி.

15. திரு ஜெயராம நாயுடு, ஈசனூர்.

16. திரு அ. சு. ச. மணியன், வடுவூர்.

17. திரு குருநாதன், அகரம், சென்னை.

18. திரு து. மதுசெல்வன், திருச்சி.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

*தஞ்சாவூர்,*
*31—12—90.*

**மு. சதாசிவம்,** எம்.ஏ.,எம்.லிட்.
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **கணிதம்** | |
| கணக்கதிகாரம் | 1 |
| நெல்லுக்கணக்கு | 1 |
| **நீதி நூல்கள்** | |
| தருமநெறி நீதிகள் | 2 |
| திருக்குறள் | 3 |
| **பிரபந்தங்கள்** | |
| **அம்மானை** | |
| பாரதஅம்மானை | 4 |
| வீரையன் அம்மானை | 5 |
| வீரையன் அம்மானை | 6 |
| **உலா** | |
| ஞான உலா | 6 |
| **பிள்ளைத்தமிழ்** | |
| காந்திமதியம்மன் பிள்ளைத்தமிழ் | 8 |
| காந்திமதியம்மன் பிள்ளைத்தமிழ் | 8 |
| திருநெல்லைப்பர சமய கோளரியார் பிள்ளைத் தமிழ் | 7 |

பக்கம்

**சதகம்**

நாராயண சதகம் 10

வடிவேல்சதகம் 9

**கோவை**

திருக்கோவையார் 11

**மாலை**

சண்முகமாலை 12

சதுர்க்கோணமாலை 12

தண்டாயுதபாணி மாலை 13

திரிபுனரமாலை 13

நாற்பது முக்கோணமாலை 14

**இதிகாசங்கள்**

இராமாயணம் (வசனம்) 15

கம்ப இராமாயணம் 16

பாரதம் (14–ஆம் போர்ச்சருக்கம்) உரையுடன் 17

**புராணம் & தலபுராணம்**

அருணாசலப்புராணம் (உரையுடன்) 18

காமாட்சிதவசு 18

சானந்தகணேகர் புராணம் - உரையுடன் 19

சோமயாகப்பெருங்காவியம் 21

திருவாப்பனூர் புராணம் 22

பக்கம்

நாசுகேது புராணம் 23

விருத்தாசலப்புராணம் 23

கதை

அரிச்சந்திரன் கதை 24

சித்திரபுத்திரன்கதை 25

பிரகலாதன்மாக்கதை 26

நாடகம்

அரிச்சந்திர நர்டகம் 27

சம்பரநாடகம் 28

வரலாறு

சிவகங்கை சமஸ்தானவழக்குப்பற்றிய வரலாறு 29

திருப்பத்தூர் பாளைப்பட்டு வெங்களப்ப நாயக்கர் அரண்மனைப்பற்றியது.

„ 31

வேதாந்த நூல்கள்

அகத்தியர் குருநாடி சாத்திரம் – 300 65

அகத்தியர் சங்கராச்சாரியருக்குத் தீட்சை கொடுத்த நெறி நீதி விளக்கம் 64

அங்காங்கபஞ்ச உபக்கிரமம் 43

அசிபதமனனம் 55

அசிபதசிரவணம் 55

| | பக்கம் |
|---|---|
| அசிபதநித்தியாசனம் | 56 |
| அடுக்கு நிலை போதகம் | 34 |
| அத்துவிதானுபவம் | 33 |
| அஷ்ட்டப்பிரமானம் | 32 |
| அஷ்ட்டப்பிரமானம் | 46 |
| கம்பளிச்சட்டைநாதர் சூத்திரம் | 38 |
| காரண காரிய உபக்கிரமம | 37 |
| காரிய பஞ்ச உபக்கிரமம் | 39 |
| கொங்கணர் கடைக்காண்டம் தீட்சை | 39 |
| சங்கராச்சாரியார் உடலறி விளக்கம் | 62 |
| சச்சிதானந்த விருத்தம் | 62 |
| சசிவர்ண போதம் (உரையுடன்) | 63 |
| சத்தப்பிரகரணம் | 44 |
| சவுவாக்கியம் மகா வாக்கியம் | 40 |
| சவுவாக்கியம் மகா வாக்கியம் | 49 |
| சிவவாக்கியர் பாடல் | 60 |
| ஞானதீபிகை | 46 |
| ஞானவாசிட்டம் | 59 |
| தத்துவக்கட்டளை | 57 |
| தத்துவதெரிசினம் | 36 |
| தற்பதசிரவணம | 53 |
| தற்பதமனனைப் | 53 |
| திருமூவர் சூத்திரம்—6 | 31 |
| திஷ்ட்டாங்கப் பிரகரணம் | 37 |
| திஷ்ட்டாந்திரப்பிரகரணம் | 47 |

| | பக்கம் |
|---|---|
| தொம்பத சிரவணம் | 51 |
| தொம்பத மனனம் | 51 |
| தொம்பதநிருத்தியாசனம் | 55 |
| தேரையர் வாக்கியம் | 35 |
| நாதாந்தத்திறவு கோல் | 59 |
| பகவத்கீதை | 58 |
| பதநித்தியசன்மம் | 54 |
| பிரமகீதை | 42 |
| பிரமகீதை | 57 |
| மகாவாக்கிய காரணாகாரிய உபக்கிரமம் | 43 |
| மகா வாக்கியகாரணாகாரிய உபக்கிரமம் | 48 |
| வேதாந்தக் கீர்த்தனை | 45 |
| வேதாந்த தெரிசினம் என்னும் தத்துவ தெரிசினம் | 50 |

## சைவசமய நூல்கள்

## தோத்திரங்கள்

| | |
|---|---|
| அருச்சனைகள் | 70 |
| கடம்பன் கவசம் முதலியன | 67 |
| சிவசகசம் | 66 |
| சிவபோக சாரவெண்பா | 67 |
| தேவி அருச்சனை | 69 |
| ஸ்ரீ பூனாஷியம்மன் பேரில்க்கும்மி | 71 |
| மகர நோன்பு விருத்தம் | 71 |
| மீனாட்சியம்மன் அகவல் | 73 |
| விபூதி தரிக்கும் வகை விபரம் முதலியன | 68 |

பக்கம்

முருகர்பேரில் தெரிசினப்பத்து 72

சைவக்கட்டளைகள்

நானாசீவ வாதக் கட்டளை 74

,, 75

வைணவ சமய நூல்கள்

கீதா சாரத் தாலாட்டு

திருவாய்மொழி (மூலம்)

நாலாயிரத்திவ்வியப் 76

பிரபந்தம் வியாக்கியானம் 76

,, 76

சில்பம்

சர நூல 80

சரசாத்திரம் 79

சர நூல் சாத்திரம் 80

சில்பசாத்திரம் 78

மனையடி சாத்திரம் 78

காம நூல்

கொக்கோகம்—உரையுடன் 82

மன்மத நூல் 81

மருத்துவம்

மாதரிச் சுருக்கம் 83

பக்கம்

## மந்திரங்கள்


| | |
|---|---|
| அனுமார் மந்திரம் (ஏவல்) | 87 |
| ஆதித்யாதி நவக்கிரக பூஜாதி | 89 |
| அவதூத மந்திரம் | 85 |
| அவதூதமந்திரம் முதலியன | 85 |
| இராமதேவர் சிபாங்கி | 91 |
| கெருடபஞ்சாட்சரம் | 93 |
| தெட்சிணாமூர்த்தி பட்சணி | 90 |
| நவக்கிரக அர்ச்சனைகள் (சோதிடம்) | 90 |
| நவக்கிரக கவச தோத்திரங்கள் | 89 |
| நவக்கிரக தசாபுத்தி பல விவரணம் | 88 |
| பஞ்சாட்சர விளக்கம் | 84 |
| மந்திரசாத்திரம் (சக்கரங்களுடன்) | 83 |
| மந்திர சாத்திரம் | 86 |
| மந்திரத்திரட்டு | 87 |
| மந்திரத்திரட்டு முதலியன | 95 |
| வகாரசூத்திரம் (பஞ்சாட்சரம் முகம்) | 94 |
| வசீகர மந்திரம் | 93 |
| வேதாந்தபட்சணி மந்திரம் | 92 |


## சோதிடம்


| | |
|---|---|
| ஆதித்யாதி நவக்கிரக பூஜாதி | 113 |
| ஆரூடசாத்திரம் | 101 |
| காலச்சக்கரம் | 100 |
| கெவுளிபலன் | 105 |

பக்கம்


| | |
|---|---|
| சாமுத்திகாலட்சணம் | 114 |
| சோதிடம் | 101 |
| சோதிடம் | 101 |
| சோதிடம் (கயறு போட்டுப் பார்த்தல்) | 102 |
| சோதிடம் | 103 |
| சேரதிடம் | 113 |
| சோதிட நூல் | 109 |
| தொடுகுறி சாத்திரம் | 113 |
| தும்மல் நூல் | 105 |
| நட்டசாதகம் சோதிடம் - உரையுடன் | 98 |
| நவக்கிரக அருச்சனைகள் | 112 |
| நாமநட்சத்திரப்பலன் | 106 |
| நிமித்த சூடாமணி | 98 |
| நிமித்த சூடாமணி – முகவுரை | 99 |
| நித்திய சூடாமணி | 99 |
| பஞ்சபட்சி சாத்திரம் | 103 |
| பஞ்சபட்சி சாத்திரம் | 104 |
| பட்சி சாத்திரம் | 109 |
| பட்சி சாத்திரம் | 110 |
| பாரிசாதகம் - 2–ம் மிடம் முதல் | 97 |
| பாவகப்பலன் – அரிட்டம் | 96 |
| மந்திரசாத்திரம் | 108 |
| மரணகண்டிகை | 111 |
| லக்கினபலன் | 109 |
| லக்கினபாவ பலன் | 111 |
| வருஷபலன் முதலியன | 107 |

# தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்
# தமிழ்ச் சுவடிகளின்
# 10 – வது தொகுப்பு
## இலக்கியப்பகுதி

### கணிதம்

1475

வரிசை எண் ; 2009 சுவடி எண் : ~~1475~~

### கணக்கதிகாரம்

ஏடுகள் ; 30. ஏட்டின் நிலைமை: சிதிலம் பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை : 1000. அளவு ; 40 X 4 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : காரிநாயனார் முழுமை : அபூர்த்தி.

குறிப்பு: இது கணித சாத்திரங்களுள் ஒன்று, இதனைச் செய்தவர் காரி என்பவர், இதைப்பற்றிய விவரங்களை முதல் தொகுதியில் கண்டுகொள்க, இதில் உள்ள ஏடுகள் மிகவும் பூச்சியரித்து. பயனற்ற நிலையில் உள்ளன,

வரிசை எண் : 2010 சுவடி எண் : 1407

### நெல்லுக்கணக்கு முதலியன

ஏடுகள் : 34. ஏட்டின் நிலைமை; நல்ல நிலை. பக்கத்திற்கு : 4. வரிகள் கி. எண்ணிக்கை : 2000 அளவு : 36 X அ.5 செ. மீ எழுத்து ; தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

"சீருன நெல்லு லெக்கம்
சிறப்புடனே நான் படிக்க
காருனே மாமுகத்தோன்
கணபதி காப்பு"

முடிவு :

புதன் கிளமை ருவுகாலம் 15 (யரு)க்கு மேல் $3\frac{3}{4}$ வியாளக்கிழமை ருகுகாலம் 18 (யஅ)க்கு மேல் $3\frac{3}{4}$ வெள்ளிக் கிளமை ருகு 11 (யகவ)க்கு மேல் $3\frac{3}{4}$

குறிப்பு ; இந்நூலில் நெல்லுக் கணக்கு முதலிலும், இறுதியில், பல ஏடுகளில் தமிழ் வருடங்களின் பெயர்களும், அட்டதிக்கு, நவரத்தினங்களின் பெயர்கள் சோதிடம் பல செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

## நீதி நூல்கள்

வரிசை எண் : 2011 சுவடி எண் : 1405

### தருமநெறி நீதிகள்

ஏடுகள் : 46. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை பகக்திற்கு : 4. வரிகள் கி. எண்ணிக்கை : 1000 அளவு : 4x3 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

"பருதி மதியிலகும் பார்மிசையோர்க் கெல்லாம்
தருமநெறி நீதிதன்னைச் சாற்றக் — கருதியிடும்
தங்கவெழுத் தைந்துகரச் சுந்திரம்பொற் செஞ்சுடா
கங்கைசுதன் தந்திமுகன் காப்பு"

நூல்

சீர்பெறுந் தருமச் செய்கை
 தெரிந்தவன் வழியே சென்று.
...... ...... ......
 ...... ...... ...... 1

முடிவு :

பாக்குவெற் றிலையுங் கெந்தம்
 பரிமள சுகந்த வாசம்
தேக்குமாப் பலாவு மெல்லாஞ்
 சிறந்தொரு காத்தால் வாங்கி
...... ...... ......
 ...... ...... ......
தானும் வாழ்ந் திருக்கு மென்றே." 93

குறிப்பு ; மனிதர் யாவரேயாயினும் தத்தமக்கு விதித்த நெறிகளின்படி, நீதிகளின்படி நடத்தல் வேண்டும், என்பதை 93 பாடல்களில் கூறுகின்றன.

வரிசை எண் : 2012 சுவடி எண் : 1418

## திருக்குறள்

ஏடுகள் : 133. ஏட்டின் நிலைமை : சிதிலம் பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை : 2000 அளவு : 27X3 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர்: திருவள்ளுவர். முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

நூல்

1-வது அரத்துப்பால். கடவுள் வாழ்த்து.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
 பகவன் முதற்றே யுலகு"

முடிவு :

"ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
 நீடுக மன்னோ விரு"

ஊடுதல் காமத்துக் இன்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்

குறிப்பு: இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலின் பிற விபரங்கள் இதன் முற்பிரதியில் (கேட்லாக் 1, 2, 6, 7) வால்யூமில் கண்டு கொள்க,

## அம்மானை

வரிசை எண் : 2013 சுவடி எண் 1388

### பாரத அம்மானை

ஏடுகள் : 340. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 7. வரிகள். அளவு : 43X4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 5000. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: அபூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

"நீடாழியுலகத்து மறைநாலிலோடைந்தும் நிலைநிற்க
வாடாத தவவாய்மை முனிராசன் மகாபாரதம்
சொன்னுள்
யேடாக வடமரு வெற்பாக வெங்கூரெமுத்தாணி
கோடாக வெழுதிய பிரானை பணிந்தன்பு கூர்வாமரோ"

நூல்

மூபதிகள் மெச்சும் புண்ணிய புராணமதை
மாபதவி யுண்டாக வண்மையுடன் பாடுதற்கு
சிந்தை குடியிருக்கும் தெய்வமே யெண்ணுளும்
...... ...... ...... ......

முடிவு :

தாய்பால் வந்து சரணஞ் சிரசேத்தி
ஆசனந் தன்னிலுகந் தன்னை தன்னை யேற்றி
பாசமுடன் போற்றி நிற்கும் பானுசுதன் மெய்பாத்து
அன்புபெருகி விழியாறிரண்டு தானேட.

காலம் :

இந்தச் சுவடி எழுதத்துவக்கின காலம் குரோதி வருடம் தனுமாதம் 10-ந் தேதி ரோகனி நட்சத்திரம் மேஷலக்கணமும் ஆகும், முதல் சுருக்கமான குருகுலச் சுருக்கம் எழுதி முடித்தகாலம் குரோதி வருடம் தனுமாதம் 15-ந் தேதி

குறிப்பு : இந்நூல் பாரதக் கதை முழுவதையும் அம்மானை நடையில் எழுதபட்டுள்ளது,

வரிசை எண் : 2014 சுவடி எண் ; 1458

## வீரையன் அம்மானை

ஏடுகள் : 67. ஏட்டின் நிலைமை : சிதிலம் பக்கத்திற்கு : 7 வரிகள் கி. எண்ணிகை : 1500 அளவு : 30X3.5 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

காரி குதிரை கள்ளனேயும் சீனி வைத்து
பாரிக் குதிரை பாங்காய லங்கரித்து
குதிரை மேல்க் கொண்டு குளந்தை பக்கம் வாருமய்யா
ஆதிரையானை அன்புடனே நம்பினேன்.

முடிவு :

பார்க்கும் பொழுது பாலகனும் தானிருக்க
யெடுத்தணைத்து யின்பமாயெனை வளர்த்தாள்
மாதியன் வீட்டில் வளந்தேன் சிலகாலம்
அந்த நல்ல பட்டணத்தில் ஆனதொரு தோஷயனும்
பொம்மன் னயகன் பேருன ருசனவன்
மகள் திரண்டாளென்று மாதியனை தானழைத்து.

குறிப்பு : இந்நூலில் இடையில் பல ஏடுகள் காணப்படவில்லையாதலால் நூல் முழுமையாக இல்லை, "வீரையன் அம்மானை" என்ற நூல் நூலக வெளியீடாக வந்துள்ளது.

வரிசை எண் : 2015 சுவடி எண் 1417

## வீரையன் அம்மானை

ஏடுகள் : 112. ஏட்டின் நிலைமை ; நல்ல நிலை பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை : 3000 அளவு 35X3 செ, மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூட வில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் கரும மாதலால்
கணபதி யென்றிட காலனுங் கைய்தொழும்
கணபதி யென்றிடக் கருமமில்லையே

மீனாட்சியம்மன் துணை. காமாட்சியம்மன் துணை.
வீரிலட்சு மியம்மன் துணையாக வேணும்.

முடிவு :

மாமறத்தில் கிளைவைத்தார்கள் பாலகனை ..........
தட்டோடே ........... தான் வைத்து வந்த அன்னேரம்
திரும்பியே வந்து தீர்த்தங்கள் தாஞடி
...... ...... ...... ......

குறிப்பு : இந்நூல் முற்பிரதியினும் (M. No. 1458) சிறிது வேறுபட்டிருக் கலாம் என எண்ண இடமுண்டாகிறது. நூல் முழுமையாக இல்லாமையினும் ஓரங்கள் மடிந்து ஏடுகள் மிகச் சிதிலமாக இருப்பதாலும் ஒத்துப்பார்க்க இயலவில்லை.

வரிசை எண் : 2016 சுவடி எண் 1421

## ஞானஉலா

ஏட்டுகள் : ஏட்டின் நிலைமை : மிகச் சிதிலம். பக்கத்திற்கு : 7. வரிகள் கி, எண்ணிக்கை : 100. அளவு : 14X5செ. மீ. எழுத்து தமிழ். ஆசிரியர் : அறிய இயல வில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

சீரூன காசி சித்தம் பலத்திலே குடியாய்ப்
பேரூன நெஞ்சகமே—பேசக்கேள்,
ஆரூய ………… …………யுன்னை யுயாந்தபடி
…… …… …… ……
…… …… …… ……

குறிப்பு : இந்நூல் முடிவு மிகச் சிதிலமாக உள்ளது.

வரிசை எண் : 2017 சுவடி எண் 1410 (a)

## திருநெல்லைப் பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ்

ஏடுகள் : 19. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 10. வரிகள் கி. எண்ணிக்கை : 1500. அளவு 28X4 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அங்கப்ப நாவலர். முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

"மாலயனும் வீறு மறைநாலுந் தேடரிய
கோலப் பரசமைய கோளரியே - சாலத்
தற்பரமாம் பிள்ளைத் தமிழ்பாட வந்துதவுங்
கற்பகமே சற்குருவே காப்பு."

முடிவு :

…… …… …… ……
…… …… ……

சிவஞான சற்குருக் குருநாத சேகரா
சிறுதே ருருட்டியருளே
சிமயபுய சதுரபர சமயகோ ளரிராய
சிறுதே ருருட்டியருளே

சிறுதேர்ப்பருவ முற்றிற்று

குறிப்பு : இந்லூல் பரசமயகோளரியார் என்று புனைப்பெயர் கொண்ட ஒருவர் மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழாகும். இவர் நெல்லையைச் சார்ந்தவர் என்பது பெயரிலேயே தெரிகின்றது. இந்நூல் எமது மகால் வெளியீடு எண் 199-ஐக் கொண்டதாகும்,

வரிசை எண் : 2018 சுவடி எண் : 1461

## காந்திமதியம்மன் பிள்ளைத்தமிழ்

ஏடுகள் : 28. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை: 1000, அளவு 38X2 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

பூவிற் சிறந்த சராசரத்தின் பொலிவைப் பொலிவிற்
புகுமுயிரைப் பொருந்து மூணர்கை
அஃதுணரும் போதாக மத்தைப் பொருந்தி
நாவிற் நின்ற சுடங்காயப்பா
வசத்தை நணித்தாயீன்று முதிராவாழ,

முடிவு :

மெல்லியையெடுத்து மீண்டு சுடகனி சுடுக்கையகன் மொய்ர்பிடை புணாந்து மிக்காண மெழுந்த நீலங்கைத் திருமுனீட்டிய கடுப்பலதின் முன்னமச்காரணமறிந்து நாணம் எட்கிணை வேணுமில் புறங்காடலத்தவனிறந் துண்ணி சேவுகைக்கு மேனையவனாமென.. ...... ...........

குறிப்பு : இந்நூலில் காப்பு, செங்கீரை. தாலம், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, அம்மானை, நீராடல், பொன்னூசலில் 8 பாடல் களே முழுமையாக உள்ளன.

வரிசை எண் : 2019 சுவடி எண் : 1462

## காந்திமதியம்மன் பிள்ளைத்தமிழ்

ஏடுகள் : 38. ஏட்டின் நிலைமை . நல்ல நிலை பக்கத்திற்கு : 7 வரிகள் கி, எண்ணிக்கை : 1500 அளவு : 30X3 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : அபூர்த்தி

குறிப்பு: இந்நூல் முற்பிரதி போன்றது. இடையிடையே பல ஏடுகள் காணப்படவில்லை,

வரிசை எண் : 2020 சுவடி எண் : 1406

## வடிவேல் சதகம்

ஏடுகள் : 51. ஏட்டின் நிலைமை ; நல்ல நிலை. பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை : 2000 அளவு : 42 X 3 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : முத்துக் குமரன். முழுமை : பூர்த்தி :

தொடக்கம் :

கார்கொண்ட மேகமழை பொழிவதுஞ் செகமீது
 கனயோக மிகவருவதும்.
கனபுருஷ மேன்மையும் புலிவளந் தருவதும்
 சுனியமிர்த குணமாவதும்,
...... ...... ......
 ...... ...... ...... -1

முடிவு :

(திட) முடைய பன்னிருகை ஆறுமுக தேவனே
 செங்கோடன் மனதிலகலாத்
திருமருவு தெய்வயானை வள்ளிமண வாளனே
 செயமுருக வடிவேலனே -101

காலம் :

பார்த்திப வருடம் சித்திரை மாதம் 17ம் தேதி புந்தி வாரநாளும் நவமியும் மகநட்சத்திரமும் மேஷராசியும் கூடின சுபதினத்தில் நாழிகை உதித்து 2க்கு மேல் முத்தையன் பாளையத்திலிருக்கும் காத்தியா-முன் குமாரனாகிய வெள்ளையனுக்கு வடிவேல் சதகம் எழுதி முகிந்தது முற்றும்.

குறிப்பு: இந்நூல் நீதிகளைக் கூறும் நீதிநூல் போன்றதாகும். இது தமது நூலக வெளியீடுகளில் ஒன்றாகும்.

வரிசை எண் : 2021 சுவடி எண் ; 1403

## நாராயண சதகம். (உரையுடன்)

ஏடுகள் : 49. ஏட்டின் நிலைமை ; நல்லநிலை. பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை : 3000. அளவு : 37 X 2.5 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

"நல்லவட வேங்கடத்து நாராயண சதகஞ்
சொல்ல வெனக்குத் துணையாமே—மல்லற்
பணையான திண்புயத்துப் பாண்டவர்க்கு முன்னம்
துணையான பாதந் துணை"

நூல்

நீர் கொண்டு தண்மலர் கொண்டு
நன்நெறி கொண்டு நின்குறி கொண்டு வண்
சீர் கொண்டு வந்தனை செய்துணை
செறிவார்க்கே ……… ……… பெறுவார்களோ

முடிவு :

ஆயிரம் புசகிறி படைத்தவான் சூரனேனும் ராட்சதன் தேவேந்திரன் முதலான தேவர்களுக்கெல்லாம் யிடுக்கன் கொண்டு வந்தான். அப்போது தேவாதியள் உன்னிடத்திலே வந்து முறையிட்டார்களப்போது வாளுசூரனை ஆயிரம் புசகியும் வெட்டிச் சங்காரம் பண்ணி அந்த தேவர்களை ரட்சிக்கவில்லையோ அப்படிப்போல என்னை ரட்சிக்கிறது உனக்கு அருமையோ நாராயணா நாராயணா.

குறிப்பு : இந்நூல் திருமால் தோத்திரங்களுள் ஒன்றாகும். இதில் 100செய்யுட்கள் இருக்கின்றன, உரையுடன் உள்ளது.

வரிசை எண் ; 2022 சுவடி எண் : 1469

## திருக்கோவையார்

ஏடுகள் : 45. ஏட்டின் நிலைமை : சிறிது சிதிலம். பக்கத்திற்கு : 12. வரிகள் கி. எண்ணிக்கை : 3000. அளவு 25X4 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் . மாணிக்க வாசகர் முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

எண்ணிறைந்த தில்லை யெழு கோபுரந் திகழக்
கண்ணிறைந்து நின் றருளுங் கற்பகமே—நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யென்கின்ற
நானூறு மென்மனத்தே நல்கு.

நூல்

இயற்கைப் புணர்ச்சி காட்சி

திருவளர் தாமரை சீர்வளர் காவிசளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குனபங் காந்தள்கொள்
............... ............ ........... (டோங்கு

முடிவு :

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குந்
...... ...... ...... ......
இரும்பரிசில் ஏற்றவர் கருளி
விரும்பினர் மகிழ மேவுத லுரைத்தது.

குறிப்பு :

இதுமாணிக்க வாசகர் எழுதிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் அறிய நூலாகும். இதனைசைவசமயத்தவர் தம்முடைய தெய்வ நூல்களாகிய 12 திருமுறைகளுள் வைத்து 8ஆந் திருமுறையாக அமைத்துப் போற்றிப் பயின்று வருகின்றனர். இந்தப்பிரதியில் நூல் முற்றுமுளது இதன்படி விபரங்கள் முதல் தொகுதி (I-st volume)யில் கண்டு கொள்க.

## மாலை

வரிசை எண் : 2023 சுவடி எண் : 1396

### சண்முக மாலை

ஏடுகள் : 12. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை பக்கத்திற்கு : 4 வரிகள் அளவு : 30 X 2.5 செ.மீ. எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 200 ஆசிரியர் : அறியக கூடவில்லை. முழுமை : அபூர்த்தி,

தொடக்கம் :

சீர்வளம தோங்கிய ஞனருளிய தேசிகனே
வார்முலே வள்ளி தெய்வானை மங்கா மகினந்தே
சிரக்கனே
பார்வை புரிந்தெனை யாண்டருள் தேவபணியவளர்
தார்புனையின் புய னாதா சிவகிரிச் சண்முகனேஞ -க

முடிவு :

நற்ருமரைச் செல்வி கௌவி மனமகிள் ஞதனையும்
பொற்ருள் பணியும் மெளியன் றனக்கிந்த பூதலத்தில்
வற்ருத செல்வமும் தந்தாள்வதற்கும் மனமிரங்கி
சற்றே கிருயே சரனபாகு சிவகிரிச் சண்முகனே

குறிப்பு : இந்நூல் முருகன் தோத்திரப் பாடல்களுள் ஒன்றாகும்,

வரிசை எண் : 2024 சுவடி எண் : 1384

### சதுர்க்கோண மாலை

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : சிதிலம் பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 20 X 3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 500. ஆசிரியர் ; அறியக் கூடவில்லை, முழுமை : அபூர்த்தி.

குறிப்பு : இந்நூல் 6—வது தொகுதியில் வரிசை எண். 1148 ஐயும், 1324 ஐயும் போன்றது.

வரிசை எண் : 2025 சுவடி எண் : 1397

## தண்டாயுதபாணி மாலை

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 5. வரிகள். அளவு : 32X3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : அறியக்கூட வில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

“கருவினிலுதித்துப் புவியினில்ப் பிறத்து
குவலையிலுளல்வது சுடனோ
மருமலரணியுங் குருபரனே வாழ
வள்ளி பங்காளனே யினிமேல்
சருதையிற் தயங்கி கிருபையில் வாழ்ந்து
யேகமுன் தருவாய்
திருவருள் செழிக்கும் பழனியுங் கிரிவாழ
சிவசிவா தண்ட பாணியனே,”

முடிவு :

“கந்தவேள் செயலால் மூன்றையுந் தாண்டி
கற்பக யோக போகத்தில்
யெந்தனை யிருந்த உந்தன்மேல்க் கடந்தான்
யென் குரு வாகிய யிறைவா
சுந்தர வடிவா யிருவர்கள் மகிழத்
தோகை மேல் யெதிற் கொண்டு வருவாய்
செந்தில் பதிசேர சிவகிரி தனில்வாழ்
சிவசிவா தண்ட பாணியனே”

குறிப்பு: இந்நூல் முருகன் தோத்திரப்பாடல்களுள் ஒன்றாகும்.

வரிசை எண் : 2026 சுவடி எண் : 1395 (a)

## திரிபுரைமாலை (சக்கரத்துடன்)

ஏடுகள் : 21. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : பக்கத்திற்கு : 5. வரிகள். அளவு :

4X25 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை ; 1000 ஆசிரியர் : அறிய இயலவில்லை. முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

சித்திதரும் பாரெசெதியுடாம் நல்ல செல்வ முண்டாம்
புத்திதரும் புகள் பெருக அருள்தரும் — பொற்பாதமலர்
முத்திதருந் திரிபுரைமாலே தன்னே முனிந்துரைக்கக்
கந்தனெனும் னந்தி வெள்ளை விஞயகள்காற்பதுவே.

நூல்

ராச வசீகரம்

"மாதரிவீரி வைரவி காளி—நல்ல வாலை குண
பூதரியோக புராணந்தி—காரண பொற்கிரிவாள்
நீதரிமந்திர சடாட்சரி யென்னு மென்னெஞ்சத்துள்
ஆதரவாய் நின்றுதவுந் திரிபுரை யானந்தியே (-க-)

(சக்கரம் உள்ளது)

முடிவு :

இது சகலத்துக்கும்

தாயே நீயான் முன் பாதாரந்தட் சந்தமியேன் றனக்கு
நீயே துணேயன்றி வேரை திணேயில்லை நிமலிசத்தி
ஆயே சமையமிதிவேளே வந்து அருள் தருவாய் (-நய-)

ஓம்நம

குறிப்பு : இந்நூல் சக்தி தோத்திரங்களுள் ஒன்றாகும். ஒவ்வொருபாட்டிற்கும் ஒரு சக்கரம் போட்டுள்ளன.

வரிசை எண் : 2027 சுவடி எண் : 1453

## நாற்பது முக்கோணமாலை

ஏடுகள் : 60. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 5. வரிகள். அளவு : 19X3 செ. மீ. எழுத்து : தமிழ் கி. ஒண்ணிக்கை : 1000. ஆசிரியர் : அறியக்கூட வில்லை. முழுமை : அபூரத்தி.

தொடக்கம் :

நடுங்காவகையன்பற் நெஞ்சிற் புனைவற்
நன்னிலறைக் கொடுகாளி யுண்ணக் கொடுக்கும்
குருதிகள் கொப்பளித்திட்டிடும் பாறக்
கொங்கையின் மீதே யிரத்தத் திலகமிடும்
தொடுங்காற் மனே மணி வருகி நீலி
தொழிலிதுவே பக்க சூலமன்ன திண்டோள்
—வருகி

......... ......... ......... .........
......... ......... .........

முடிவு :

சீலை மாறணம்

எங்குமெரிய கிரிகள் பொடிப்படவென் பகைஒற்
அங்கம் பிளந்திட விண்மண்கிளிந்திட வார்த்தை
—ஞக்து
பொங்குங் கடல்கள் சுவறிடச் சிங்கத்து மீது
—வருவாள் வருகி சிவசத்தியே,

குறிப்பு : இந்நூல் மந்திரசாஸ்த்திரம் போன்றதாகும்.

## இதிகாசங்கள்

வரிசை எண் : 2028 சுவடி எண் : 1459

### இராமாயணம். (வசனம்)

ஏடுகள் : 247. ஏட்டின் நிலைமை : மிகச்சிதிலம் பக்கத்திற்கு : 8. வரிகள். கி. எண்ணிக்கை : 5000. அளவு : 37X3 செ. மீ. எழுத்து : அறியக் கூடவில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

"நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடுயர் வநிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே."

முடிவு :

ஸ்ரீ ராமசுவாமியும் சுயிலககினம் பார்த்தி லெட்சு மணரும் தானுமாகக் கோதண்ட பாணியாக புறப்பட் பட்டு வருகிறபோது அனுமாரும் அங்குதனும் சுவாமி களுக்குத் தெண்டஞ் செய்து யெங்கலுடைய தோளின் பேரிலே யெழுத்தருள வேணுமென்று சொல்ல ஸ்ரீ ராம சுவாமியும் சந்தோஷப்பட்டு........

குறிப்பு: இந்நூலில் இராமாயணம் முழுவதும் வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. இடையில் பல ஏடுகள் காணப்படாமையாலும். ஏடுகள் ஒடிந்தும் சிதிலமாகவும் உள்ளதால் நூல் முழுமையாக இல்லை.

வரிசை எண் : 2029 சுவடி எண் 1410 (C)

## கம்ப இராமாயணம்—இரணியவதைப்படலம்

ஏடுகள் 11. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத் திற்கு : 15. வரிகள் கி. எண்ணிக்கை : 1500. அளவு 28X4 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : கம்பர் முழுமை பூர்த்தி.

தொடக்கம் :

இரணியவதைப்படலம் சீருமசெயம்

வேதங் கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனேயீந்தான்
போதங்கண்ணிய வரமவன் றரக்கொண்டு போந்தான்
காதுங் கண்ணுதல் மாலயன் கடைமுறை காணுப்
பூதங் கண்ணிய வலியெலாமொரு தனிப்பொறுத்தான் -க

முடிவு :

ஈதாகு முன்னிகழ்ந்த ........ பெருமா னென்னுரையை
யாதானுமாக நினையாதிகழ்தியேல்
நீதாய் வருதறிண்ணமென்னச் செயினான்
மேதாவிகெட் கெல்லாம் மேலான மேன்மையான். -176

இரணியவதைப்படலம் முற்றும்.

குறிப்பு: இந்நூலில் கம்பராமாயணத்திலுள்ள இரணியவதைப் படலம் மட்டும் இடம் பெற்றுள்ளது.

வரிசை எண் : 2030 சுவடி எண் : 1463

## பாரதம் (14-ஆம் போர்ச்சருக்கம்) உரையுடன்

ஏடுகள் : 87. ஏட்டின் நிலைமை : சிதிலம் பக்கத்திற்கு : 8. வரிகள் கி. எண்ணிக்கை : 2000, அளவு : 40X3.5 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

யிருதிறத்துப் படையிலும் பட்டசதுரங்க சேனைகார் ராச மண்டலீ கற்றும் பிழைத்தெழுந்து ஒரு முகமாக்கஷ வந்தது போலும் பலவற்னனங்களாகிய குதிரைக் கூட்டங்களும் மும்மதம் பொருந்திய ஆனைக்கூட்டங்களும் பத்தியமும் ஆகாசமும் பூமியுந் திக்குத் திசைகளும் தெரியாதபடிக்கு குவிக்குது.

முடிவு :

இந்தப் பிறகாரம் மல்லுக்கட்டி முட்டியித்தம்
பண்ணுகையில் வீம சேனன் தன்கை
விரல்களைந்தையு மொறு முனையாகப் பிடித்துக்
கொண்டு யுயர்ந்த சிகரமலையில்ப் பரநகர

குறிப்பு : இந்நூல் மிகவும் சிதைந்தும், சிதிலமாகவும் உள்ளது முதல் ஏடும், இடையில் பல ஏடுகள் காணப்படாமையால் நூல் பூர்த்தியாக இல்லை. கௌரவர்களுக்கும். பாண்டவர்களுக்கும் 18 நாள் போர் நடந்தது. இதில் 14-ஆம் நாள் நடந்த போரின் வருணனை கூறப்பட்டுள்ளது.

## புராணம் & தலபுராணம்

வரிசை எண் ; 2031 சுவடி எண் : 1415

### அருணாசலப் புராணம்—உரையுடன்

ஏடுகள் : 170. ஏட்டின் நிலைமை : சிதிலம். பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை : 5000. அளவு 40X3.5 செ. மீ, எழுத்து : தமிழ் ஆசிரியர் : சைவ எல்லப்ப நாவலர். முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

மிக்க வேத வியாதர் விளம்பிய
இக்க தைக்கிய வின்றருள் செய்திட
முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்க ளித்தினைக் கைதொழு தேத்துவாம்.

முடிவு :

''யிக்கதை படித்தோர் கேட்டோ
ரெழுதினோ ரெழுதி வைத்தோர்
மைக்கடல் சூழ்ந்த விந்த
வையக முழுது மாண்டு
தக்கசந் தான போக
சவுபாக்கியந் தணிய வாழ்ந்து
திக்கரு ணேச ரன்பால்
சிவபதம் பெறுவர் தாமே.

குறிப்பு : இந்நூல் 6ம் தொகுப்பிலுள்ள சுவடி எண் 981ஐப் போன்றது. பிற விபரங்கள் அப்பிரதியில் கண்டு கொள்க.

வரிசை எண் : 2032 சுவடி எண் : 1404

### காமாட்சி தவசு

ஏடுகள் : 102. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை, பக்கத்திற்கு : 6. வரிகள் கி. எண்ணிக்கை ; 3000. அளவு :

42X2.5 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூட வில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

நூல்

முந்திமுந்தி விநாயகனே முருகா சரஸ்பதியே
கந்தனுக்கு முன்பிறந்த கற்பகமே முன்டைவாய்
சீர்வளருங் காட்சித் திருக்கம்பை தன்னிலேதான்
வாழ்வுபெருங் கம்பை மாதுகம்பை காமாட்சி

முடிவு :

எண்ணும் பதினாறு ஈடேறி வாழ்ந்திருப்பீர்.
கொல்லிமலை சதுரகிரி எல்லைத் தழைத்திருக்க
மாரி பொழிந்து சென்னல் விளையுமிப்போ
மலையாள ரெல்லோரும் வாய்திறந்து ஏதுரைப்பார்.

காலம் :

விசுவாவிசு வருடம் புரட்டாசி மாதம் வேழுயம் பாளையத்திலிருக்கும் பள்ளிக் குடத்தான் காமாட்சிதவசு எழுதினது முற்றும்.

குறிப்பு : இந்நூல் காமாட்சி, சிவனை திருமணம் செய்து கொள்ள வேண்டி, கம்பை நதிக்கரையில் தவமிருந்த வரலாறு கூறுகிறது. எளிய நடையில் அம்மானையாகக் கூறப்பட்டுள்ளது. நூல் அபூர்த்தியாய் உள்ளது. இது எமது மகால் நூலக வெளியீடு களில் ஒன்றாகும்.

வரிசை எண் : 2033 சுவடி எண் : 1385

## சானந்த கணேசர் புராணம்—உரையுடன்

ஏடுகள் : 276 ஏட்டின் நிலைமை : மிகச் சிதிலம், பக்கத்திற்கு : 6 வரிகள் கி. எண்ணிக்கை : 5000 அளவு 25X5 செ. மீ எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக்கூடவில்லை முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

என்றகைத் தல்லே யிரித்தே கதிராச்சி
நன்றுநெறி காண நடைகாட்டி—நின்ற நிலத்
தையா னனத்தா னரியாக்கை நீக்கிவை ந்து
கையா னனத்தான் கழல்'' துவக்கம்
காளயுத்தி ஹூ தை மீ

நூல்

பருதி மதிதீ யெனுமூன்றும் பார்வையாகத் திகழ்ந்திடினுங்
கருகு திமிரம் புலராத களத்தெம்பெருமாள் மலே வில்லோன்
கருதி பரவு மிமையமகள் துணேவ நாமப் பணியாற்றிப்
பெருகு துயரத் திரையொழியப் பிறவிக் கடலே யகற்றுவாம்.

முடிவு :

நிருமல முடையவெண்ணீறு வாழ்கவே
வரமருள் சுண்டிகை மாலே வாழ்கவே
ஒருதிரு வெஞ்செழுத் தோங்கி வாழ்கவே
யரனருள் பெற்றபே ரன்பர் வாழ்கவே

ஆகத்திருவிருத்தம். 492. சிவமயம்

காலம் :

சித்திரபுத்தி ஹூ மாசி மீ 20ந் தேதி குருவாரம் மிருக சீரிட நட்சேத்திரமும் கூடிய சுபதினத்தில் செங் காட்டுப் பட்டியிலிருக்கும் செட்டிகுளம் சுப்புரெட்டியார் குமாரன் கிஷ்ணய்யனுக்கு சானந்த கணேசர் புராணம் யெழுதி நிறைவேறினது. சம்பூரணம். குருகமலம் பரமானந்தம் அகண்ட பரிபூரண சட்சிதானந்த சாக்ஷாத் கார சுத்த சைதன்னிய நிற்மல நிற்குண நிறஞ்சன பரிபூரண கருணாசாகர தியானந்த சுயசிற்சொரூபமாகிய பரப்பிரம வஸ்துவின் திருவடியே சரணம் சற்குருமயம்

குறிப்பு : இந்நூலில் சானந்தமுனி யமபுரமுற்றதும் அங்குள்ள நரகங்களின் தன்மை புண்ணியபாவ விளக்கங்களும் விளக்குகிறது. அச்சிடப்படவில்லேயெனத் தெரிகின்றது. நூல் முழுமையாக இருந் தாலும் இடைஇடையே ஏடுகள் பாதியாக முறிந்து உள்ளதால் அபூர்த்தியான நிலே காணப்படுகின்றது.

வரிசை எண் : 2034 சுவடி எண் ' 1460

## சோமயாகப் பெருங்காவியம்

ஏடுகள் : 61. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 10. வரிகள். கி. எண்ணிக்கை : 2000 அளவு : 30X3.5 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : முத்தாண்டியா பிள்ளைக்கவிராயர். முழுமை : பூர்த்தி

தொடக்கம் :

"சீர்சிறந்த திருமுகத்தா னயோத்தியர்தங்
குலமரபு செழிக்கத் தோன்றிப்
பேர்சிறந்த காமாட்சி புரிசோம யாகம்பிர
பலத்தைக் கூற
ஏர்சிறந்த வண்டமுத வனைத்து நீயெனவலங்கொண்டு
இறைவன் செங்கை
ஆர்சிறந்த கனிவாகும் வீரபாண்டிய
விநாயகனே காப்பதாமே"

முடிவு :

முன்னையினுஞ் சிறப்புளனிங் கிவனென்ன
வயோத்தியர்கள் முதல மற்றைந்
துன்னினர்க ளியாவர்கட்குந் தொலையாத
கருணை வெள்ளஞ் சுரந்திநாளு
மின்னல்மேற் பலபொருளும் பல்வளனுஞ்
சிறப்ப விசை யெங்கு நீடப்
பொன்னகரா னெனவாழ்ந்தான் காமாட்சி
மன்னனெனும் புகழினானே.
புத்திரோற்பத்திப் படலம் முற்றுப் பெற்றது
ஆகப்படலம் 28-க்குத் திருவிருத்தம் 609.

குறிப்பு: இந்நூல் பாட்டுடைத் தலைவனான காமாட்சி என்பவன் பிள்ளைப்பேறில்லாமையால் சோமயாகம் செய்து மகப்பேறடைந்த வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் எமது நூலக வெளியீடுகளில் ஒன்றாகும்.

வரிசை எண் : 2035 சுவடி எண் : 1468

## திருவாப்பனூர்ப் புராணம்

ஏடுகள் : 81. ஏட்டின் நிலைமை : மிகமிகச்சிதிலம். பக்கத்திற்கு : 11. வரிகள். அளவு : 14 5X4 எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 4000. ஆசிரியர் : கந்தசாமிக் கவிஞர். முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

கடவுள் வணக்கம்

திருத்தன் மாக்கடன் மேனியஞ் செம்மலா
ரருத்தன் மாக்கம லந்திக ழாப்பனூர்
நிருத்தன் மாக்கதை நூனிரம் பும்பொட்
டொருத்தன் மாக்கழ லுன்னுமென் னுள்ளமே.

முடிவு :

"தெய்வமறை யவர்விளங்க சிவசமய
மனுவேந்தன் செங்கோ லோங்க
பெய்வளங்கூர் மழைபொழிக மன்னுயிர்க்கின்
பம்பொலிக பெரியோர் வாழ்க
மெய்வளருந் திருவாப்ப னூருடைய பரமர்திரு
மேனி தீண்டுஞ்
சைவர்குலம் பெருகவான் றளிபுதுக்கு
மன்பர்குழாந் தழைக மாதோ."

காலம் :

(9) 94 வருடம் புரட்டாசி மாதம் 20-ஆம் தேதி முத்துக் குமாரசுவாமி கையினலே யெழுதி முடிந்தது முற்றும்.

குறிப்பு: இது திருவாப்பனூர் தலமகிமையை உரைப்பது. இதன் ஆசிரியர் கந்தசாமிக் கவிஞர். இந்தப் பிரதியில் இந்நூல் முழுவதும் உள்ளது.

வரிசை எண் : 2036 சுவடி எண் : 1414

## விருத்தாசலப் புராணம் — உரையுடன்

ஏடுகள் : 234. எட்டின் நிலைமை : சிதிலம். பக்கத்திற்கு : 6. வரிகள். கி. எண்ணிக்கை : 5000. அளவு : 14.5 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : ஞானக்கூத்தர் முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

முடிவு :

கேழ்ப்பாராகிலும், அவர்களுக்கு பாலன் யெத்தனை பிராமணரை......... பிதாவை பசுவை யிந்தப் பஞ்சமா பாதகங்களைத் சஞ்சயத்தாலும், சிவத்திரவியங்களை யெடுத்தாலும், சாராயங்களைச் குடித்தாலும் அவர்களைப் பாவங்கள் சூழாதென்றவாறு.

குறிப்பு: இது விருத்தாசலம் என்னும் சிவத்தலத்தின் பெருமை முதலியவற்றைக் கூறுவது. அச்சிடப்பெற்றுளது, சுவடி மிகவும் பழுதடைந்து ஏடுகள் முறிந்தும் உள்ளன, ஒப்புமைக்காண உபயோகிக்கலாம்.

வரிசை எண் : 2037 சுவடி எண் : 1410 (b)

## நாசுகேது புராணம்

ஏடுகள் : 12. எட்டின் நிலைமை : நல்ல நிலை' பக்கத்திற்கு : 12. வரிகள். கி. எண்ணிக்கை : 1000. அளவு : 28X4 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: பூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

" நாசுகேது புருணத்தை நல்லோர்கள் கேட்டாக்கால்
வாசுகியால் நீடுழிவாழலாம்—வோசையுடன்
உம்பர் பதம் பெறலாம் உமையாயருள் பெறலாம்
அம்புவியை ஆளலா மங்கு."

முடிவு :

யிந்தக் கதையை மகாவிஷ்டுணு சூதமாமுனிக்கு அறிக்கை பண்ணினர் சூதமகரிஷி பூலோகத்திலே சகல பிராணிகலுமறிந்து கரையேறும் பொருட்டாக தற்ம புத்திரர் மற்று சிலரிஷிகளு மறிந்து தோத்திரம் செய்தார் கள். யிந்தக்கதையை சுற்றோருஞ் கேட்டோரும் புண்ணியம் பெற்றும் அனேக சுபசோபன செனனமாக யிருந்து சொற் கங்களை அனுப்பவித்திருப்பார் களென்றவாறு. நாசுகேது புருணயெழுதி முகிந்தது முற்றும்.

ஞைகை புதூர் அருஞசலபிள்ளை.

குறிப்பு : இந்நூல் வீயாங்கன் என்னும் மகரிஷியின் புதல்வ னான நாசுகேதுவின் சரிதத்தை வசன நடையில் கூறுகிறது. இதில் புண்ணிய பாவங்கள் இன்னவை யென்றும், அவற்றுள் பாவஞ்செய்த வர் யமலோகத்தில் இன்ன இன்ன தண்டனை பெறுவர் என்றும் கூறப்படுகிறது.

வரிசை எண் : 2038 சுவடி எண் : 1386

## அரிச்சந்திரன் கதை

ஏடுகள் : 247. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 7. வரிகள், அளவு : 42X3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 5000. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

திசடச் சக்கர தாமரை ஞயகன்
திகடச் சக்கரச் செம்முக மைந்துளான்
அகடச் சக்கர பூவின் மணியாயுரை
விகடச் சக்கர மெய்ப்பதம் போற்றுவாம்"

நூல்

சீமாது வாழ்கப்புகள் கெவுரி வீற்றிருக்க
தாமாது வாழ்கயிந்த ஞனிலமெல்லாந் தழைக்க
செங்கமலத் தோனுந் திருமாலு மீசுரனும்
ஐங்கரனும் பூங்கவனும் அண்டருடன்
......... ......... .........

முடிவு :

உரைப்பவர் செப்புவர் உகந்து கேள்ப்பவர்
விருப்பமுத் தெளுதியே மிகவும் வைத்தவர்
திருப்பெருங் கடவுளாற் பதத்தைச் சேந்தினி
இருப்பாரென்ளுஞ் மின்னிதையங் கூறவே

ஆக விருத்தம் 141. ஆருமுகம் துணையாகவும். வேலுமயிலு துணை,

குருபாதமே செதி. ருமசெயம்.

குறிப்பு: இந்நூல் அரிச்சந்திரனுடைய வரலாற்றை அம்மானை நடையில் கூறுகிறது.

வரிசை எண் : 2039 சுவடி எண் : 1408

## சித்திரபுத்திரன் கதை

ஏடுகள்: 25, ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 5 வரிகள். கி.எண்ணிக்கை: 1000. அளவு 35X2.5 செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவிலலை. முழுமை; அபூர்த்தி.

தொடக்கம் :

நூல்

நீலக்கல்லினுலே நித்திரையாய் நிருத்தி
பந்தல்மேல்கட்டி பட்டாடை தொங்கவிட்டு
......... கமுகவாழை பொருந்தவே தானிருத்தி
சாணத்தாற் தரைமெழுகி சந்தனத்தால் கோலமிட்டு
......... ......... ......... .........
......... ......... ......... .........

முடிவு :

புண்ணியஞ் செயித்ததை போதவே சொல்லுமென்ருற்
என்று சிவநருளால் ஏவிநாற் தூதுவரை
சூலமெடுத்து தொடர்ந்தோடிவருவாரும்
அமராபதி வீட்டை அடையவளைஞ்சு கொண்டு
யிவள் பண்ணுகிற புண்ணியத்தை பார்த்துநின்ருர்
[தூதுவர்கள்

குறிப்பு : இது சித்திரகுப்தனது சரிதத்தைக் கூறுவது. இவன் ஆன்மாக்கள் செய்யும் புண்ணிய பாவங்களை உணர்ந்து யமனுக்கு அறிவிப்பவன்.

வரிசை எண் : 2040 சுவடி எண் : 1450

## பிரகலாதன்மாக்கதை

ஏடுகள் : 150. ஏட்டின் நிலைமை : மிகவும் சிதிலம். பக்கத்திற்கு : 5. வரிகள் கி. எண்ணிக்கை ; 3000. எழுத்து : தமிழ். ஆசிரியர் : நல்லூர் சபாபதி முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

"முருகாறும் துளப மணி மாலை ...... ......
எனத் தொடங்கும் காப்புச் செய்யுளில் அமைந்துள்ளது.

முடிவு :

சிதிலமாக உள்ளது.

காலம் :

18 ஆம் நூற்றாண்டு

குறிப்பு : பாபநாசம் சருக்கைக் கிராமம் ஸ்ரீ முத்துமாரி ''பக்தப் பிரகலாத நாடக சபையினர் சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த சிதிலமான சுவடியை மகாலுக்கு அன்பளிப்பாக அளித்துள்ளனர். இச் சுவடியின் பிற்காலபடியெடுக்கப்பட்ட ஏட்டுச் சுவடி ஸ்ரீ நாடக சபையினரிடம் வழிபாட்டில் உள்ளது.

## நாடகம்

வரிசை எண் : 2041 சுவடி எண் : 1474

### அரிச்சந்திர நாடகம்

ஏடுகள் : 110. ஏட்டின் நிலைமை : சிதிலம் : பக்கத்திற்கு : 5, வரிகள் கி. எண்ணிக்கை : 2000 அளவு : 35X2.5 செ. மீ. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக் கூடவில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

''மதிவளர் குடையுங் செங்கோல் மனு முறை நடத்தி வாழும்
அதிசயம் படைத்த கோமான் அரிச்சந்திரன் கதையை பாட
துதிசெய்யும் பொருளும் நல்ல தொண்டர்கள் வெவ்வினையும் தீர்த்துக்
கதிதரும் விட்டவாசல் கணபதி காப்பு தானே.

முடிவு :

வேதியர் பின் எவ்விதமாக மனந்துணிந்து போவேன்
ஐயாசாமி-சந்திரமதி சொல் — (விருத்தம்)
செப்பாருங் குவிமுலையாலெள்ள வருங் கணவனுடன்
சேர்ந்து வாழ்க வொப்பாருமில்லா லென்
கணவன் என்னுடனே உறவாடாமல்.........

குறிப்பு : இந்நூல் அரிச்சந்திரன் கதையை நாடக வடிவில் கூறுகிறது. இதில் தரு வசனம் முடுகு. விருத்தம் முதலியன விரவி வந்துள்ளன. நல்ல நடையாக இருந்தும் நூல் முழுமையாக இல்லை

வரிசை எண் : 2042 சுவடி எண் ; 1387

## சம்பர நாடகம்

ஏடுகள்: 44, ஏட்டின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு : 5 வரிகள் அளவு : 19X3 செ. மீ. எழுத்து தமிழ் கி, எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

விநாயகர் பேரில் விருத்தம்

சீர் தந்த சித்திர விஸ்தார கவிமழை
செகதலம் தனில் மன்ன மண்டலீகர்
தார்வந்த பரிமள புட்பகொ நீதள கலச
சம்போக தனனெனரேத்தவும் சர்வ
நீர்வந்த யாளிகேங்கேகோ பெருங்காயுடன்
......... ......... .........
......... ......... .........

முடிவு :

சல்லரி முரசு பாட தவண்டம் மல்லாரியோங்க
பல்லொளி பஞ்பனென்ன பஞ்சவாளி சாமவே
மங்களம் மங்களம் செயசெயமங்களமங்களம்

குறிப்பு: இது நாடக வகையைச் சேர்ந்தது.

வரிசை எண் : 2043 சுவடி எண் : 1402

## மார்க்கண்டேய நாடகம்

ஏடுகள் : 148. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 6 வரிகள் கி. எண்ணிக்கை : 2000 அளவு : 36X2.5 செ. மீ. எழுத்து : தமிழ் ஆசிரியர் : அறியக் கூடவில்லை. முழுமை : அபூர்த்தி

தொடக்கம் :

"சீருன திருக்கடையூர் அமுர்த லிங்க
ஞயகர் தற்செயலே வேண்டி
பேருன செந்தமிழால் மார்க்கண்ட
னாடகத்தின் பெருமை கூற
தீருத வினையகத்தும் அபிராமி
யீண்டெடுத்த சேயன் சித்தி
காருணே மாமுகத்தோன் கணபதிலை
மிக்கதைக்கி காப்ப தாமே"

முடிவு :

தேனில் வீழ் ஈபோல் வலேப்படு கயர் போல் செருவர்
கை பறவை சிக்கியது போல் சோனி ......... போல்
மழையில்லாப் பயிர் போல் கொம்பில்லாப்படர்
கொடியது போல் கானகத்திருளில் முடவனுற் .........
கலங்கிய காலனுல் மெலிந்து — ஆனே நீ நடுமை
கடுமையாய் வந்தேன் அபயமீதென்னே யாளறனே

குறிப்பு : இது மார்க்கண்டேயர் சரிதத்தை, விருத்தம், தரு, வசனம், முதலியவற்றில் அமைத்து நாடகமாக அமைந்துள்ளது. இந்தப் பிரதி மிகவும் சிதிலமாக, அபூர்த்தியாகவுமிருக்கிறது.

## வரலாறு

வரிசை : 2044 சுவடி எண் : 1447

### சிவகங்கை சமஸ்தான வழக்குப் பற்றிய வரலாறு

ஏடுகள் : 31. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 6. வரிகள் அளவு : 35X3 செ. மீ. எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 1500. ஆசிரியர் : எஸ். சுப்பராமஅய்யர் முழுமை : அபூர்த்தி

தொடக்கம் :

முதலாம் பாகம் - முதலாவது அத்தியாயம் முதலாவது சிவகங்கை ஜமீந்தாரியானது 1730ம் வருஷத்தில் அப்

போதிய கர்நாடக நபாவினுல் சஸ்வர்னத் தேவருக்காக வுண்டாக்கப்பட்டதாயும் அவருடைய சந்ததிகளிறந்த பிற்பாடு 1801ம் வருஷத்தில் கம்பெனியாரால் சந்ததியில்லாமையால் கெவர்மெண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாயும்.

முடிவு :

நாம்யிது மூலமாயறிவித்திருக்குாருமா யிந்த
நோட்டீஸ் தமிழ்காபி யிந்த நோட்டீஸ்சுக்கு
முந்திக் கோர்வை செய்திருக்கிற இருபத்தி
யெட்டும் இங்கிலீஷ் காபிக்குச் சரியான
தமிழ்காபி இதானது வேரை ரேந்துஇப—உ
கருப்பபிள்ளையுண்பது. ......... ......

காலம் :

சென்னைபிராசதானியிலும் மதுரை ஜில்லாவிலுமிருக்கிற சிவகங்கை ஜமீந்தாரியின் பொய்யான யிஸ்து மிருர்க்கணக்கு மதுரை டிஸ்டிரிகட்டு வைக்கீல் மேஸ்ற்றர் எஸ். சுப்பராம அய்யரவர்களால்ச் செய்யப்பட்ட சுருக்கம்.

1878ம் வருடம் பதிப்பிக்கப்பிக்கப்பட்டது.

குறிப்பு: இந்நூலில் சிவகங்கை சமஸ்தானத்தில் நடந்த வழக்குப்பற்றிய வரலாறுகள் அப்பொழுது வக்கீல் ஒருவரால் பிரதி செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2045 சுவடி எண் : 1448

## திருப்பத்தூர் பாளையப்பட்டு வெங்களய்ய நாயக்கர் அரண்மனைப் பற்றியது

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை ; சிதிலம். பக்கத்திற்கு : 6. வரிகள். அளவு : 43X3.5 செ. மீ. எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் ; அறியக்கூடவில்லை. முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

சாலிவாகன சகாப்பதம் 1702ல் செல்லா நின்ற சார்வரி வருடம் தைமாதம் 11ந் தேதி குமாரபேட்டை அரமனையார் ஸ்ரீ மது வெங்களப்ப நாயக்கரவர்களுக்கு வண்ணூரப்பட்டி யிருந்து வந்திருக்கும் அளகன்மகன் நயினன் சதுங்கன் 2 பேர்களும் எழுதிக் கொடுத்த அனட ஒலை.

குறிப்பு: இவ்வரலாறு 1448—a, b, c, d, e என 5 சுவடிகளாக பகுக்கப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2046 சுவடி எண் : 1449

## திருப்பத்தூர் பாளையப்பட்டு வெங்களய்ய நாயக்கர் அரண்மனைப் பற்றியது

ஏடுகள், 28, ஏட்டின் நிலைமை: சிதிலம். பக்கத்திற்கு: 3 வரிகள். கி. எண்ணிக்கை: 1000. அளவு: 30—4.5 செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை முழுமை: அபூர்த்தி.

குறிப்பு: இந்நூல் சு. எண். 1448-இல் உள்ள அரண்மனைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன,

## வேதாந்த நூல்கள்

வரிசை எண் : 2047 சுவடி எண் : 1434

## திருமூலர் சூத்திரம்—6

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு : 6. வரிகள். அளவு : 23X3 செ. மீ. எழுத்து தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : திருமூலர். முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

"ஆதியும் வேதசுழிமுனையும் நின்று
அகண்டு நின்ற திருமூலர் சொன்ன மாற்கம்.
சோதி திருசுடரொழியில் நின்ற தேவர்
சொக்கிச்சு மனதாகி சொல்லுவர்தம்
நீதி சிறு ஆண்டவனே தொழுது நானும்
நிறம்மலமாய் நின்ற சத்தி வாக்குனலே
வீதி திறு வேதாந்தம் விளங்கும் சித்தி
விளம்புரேனிச் சுருக்கம் பாரு பாரே."

முடிவு :

"கொள்ளடா முன்ம்போலே தயிலவாங்கி
கூர்மையுள்ள தயிலமதைபந விடை தான்ங்
கொள்ளு
உள்ளடா மயக்கமுத்த மூசனசயாகி
ஒருநொடிக்குள் தெளிந்து போகும்
அல்லடா இப்படியே மண்டலமே கொண்டால்
அனசயாது திரேகமது கல்லுத் தானே.

முற்றும்.

குறிப்பு: இந்நூலில் தத்துவமும் மருத்துவமும் கூறப்பட்டுள்ளது
.

வரிசை எண்: 2048 சுவடி எண்: 1472 (d)

## அஷ்ட்டப்பிரமாணம்

ஏடுகள்: 33. ஏட்டின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 5 வரிகள். கி.எண்ணிக்கை: 1000. அளவு: 23.5 X 2.5 செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள். முழுமை: பூர்த்தி.

தொடக்கம் :

ஸ்ரீ வேங்கடேச குருவே பாதாரவிந்தமே சகாயம்,
ஸ்ரீ ரெங்கநாதாய நம. ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
லோகோ உபகார நிமித்தியமாக தனது அனுபவமான

அஷ்ட்ட பிறமாணத்தை அருளிச் செய்கிருர். பெந்த விசாரணையினாலே வஸ்த்து நிற்ணயம் பண்ணுகிறது. அப்படிப்பட்ட வேதாந்தத்தைச் சொல்லுகிறேம்.

முடிவு :

அகண்டாகார விருத்தியுடனே கூட்டிமலையி நூச்யிசிலே விட்ட தயிலாதாரைப் போலயிடை விடாமல் அகண்டகாரவிருத்தியினாலேநிற்குண தியானம் பண்ணுவதே நிறத்தியாசனமாவான ஒருவனுக்குயிப்படி கேழ்வியான சிறவனத்தினாலே சமுச்சியம் யெவ்வளவு காலத்திற்யில்லையோ அவ்வளவு காலம் சிறவணம் பண்ணவேணும் சம்பூறணம்,

காலம் :

யிந்த அஷ்ட்ட விறமாணம் ஸ்ரீ சங்கறசாரிய குருமூர்த்தி இறந்தபடி ஸ்ரீ குருவாகியதத்துவ ஞான நிஷ்ட்டருகிய வெங்கடபதி அய்யர் சுவாமிகள் வசனரூபமாக சிஷ்ருன தத்துவஞான பிறகாசருன ஸ்ரீகுண்டாரெங்கன் செட்டியாற்ருக்கு அருளிச் செய்தாற். முத்தும். பரிவேங்கடபதி அய்யர் குருவே சகாயம். ஸ்ரீ மதவேண்கடேசமூர்த்தினே நம ஸ்ரீ ராமசெயம். பிறட்டாசி மீ முதல் தேதி கும்மாகஸ்த்தூரி ரெங்சுன்யெழுதினது.

ஸ்ரீ ராமஜெயம்.

குறிப்பு : இந்நூல் வேதாந்தக் கருத்துக்களைக் கூறுகின்றன.

வரிசை எண்: 2049 சுவடி எண் : 1480

## அத்துவிதானுபவம்

ஏடுகள் : 27 ஏட்டின் நிலைமை ; மிகச்சிதிலம் பக்கத்திற்கு : 12, வரிகள் கி. எண்ணிக்கை : 500 அளவு : 37.5X5 செ. மீ. எழுத்து : தமிழ், ஆசிரியர் : அறியக்கூடவில்லை, முழுமை : அபூர்த்தி.

தொடக்கம் :

காப்பு

உளவிருளிரிதர வொளிர்பவனெவன..................
றிவினனெவனவன்
வளமலியடியவாமதி நலமெவனவனறிதரும்
மடிதொழுதன் மனவறி தழும்

............ ......... ......... ......... .........

முடிவு :

இனியனுயெல்லாந் தன் பரவினிறவணருளாற் பெற்ற
முனிவரெல்லா முடியுற வணங்கியேத்தி
நனிமிசு நானென்கின்ற பதப்பெருஞ்ஞடிவேரு
ரனியமில் பிரம்மாக வறந்ததிசயித்திருந்தார்
பனிரண்டாவது முன்சொல்லியவு பனிடதங்களின்
அர்த்தத்தைத் தொகுத்துரைக்கு மத்தியாயம் முத்தும்
ஆகவத்தியாயயம் - 12 திருவிருத்தம் 547

குறிப்பு : இந்நூல் சாத்திரங்களுள் ஒன்ருகும். ஆனல் இந்தப் பிரதியில் இடையிடையே ஏடுகள் காணப்பட வில்லையாதலால் நூல் முழுமை பெறவில்லை.

வரிசை எண் : 2050 சுவடி எண் : 1419

## அடுக்குநிலை போதகம்

ஏடுகள் : 11 ஏட்டின் நிலைமை : நல்லநிலை பக்கத்திற்கு 7, வரிகள் கி. எண்ணிக்கை : 500 அளவு : 18X3 செ. மீ. எழுத்து ; தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : பூர்த்தி.

தொடக்கம் :

சொல்லறிந்த விடமெங்கே முப்பாளெங்கே
துவாரபா லகறெங்கே முதற்ப்பாளெங்கே
நல்லசங்கு னதியெங்கே வைகுண்டமெங்கே

நாரணனும் ஆலிலைமேல் துயன்றதெங்கே
